# நீதிச்சேவை ஆணைக்குழு

# நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர் பதவி

01. 2002 ஆண்டு 04ஆம் இலக்க நிர்வாக மேன்முறையீடுகள் நியாய சபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மேன்முறையீடுகள் நியாய சபையின் தலைவர் பதவி (I) உறுப்பினர் பதவி (I)க்கான விண்ணப்பங்களை கோருவதற்கு நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. சகல விண்ணப்பப்படிவங்களும் அவ் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான இறுதித் திகதியான 2024.07.25ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப் பெறும் வகையில் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. **தகைமைகள்**

அ. விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி திகதியின்படி அரச உத்தியோகத்தராக 20 வருடங்களுக்கு அதிகமான அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது

ஆ. விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி திகதியின்படி சட்டத்தரணியாக 10 ஆண்டுகளுக்க மேல் அனுபவம் உள்ளவர்கள்.

03. **தலைவர் பதவிக்காக வழங்கப்படும் கொடுப்பனவு விபரம் பின்வருமா**று

- மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 135,000/-
- மாதாந்திர போக்குவரத்து கொடுப்பனவு - உத்தியோகபூர்வ வாகனம் அல்லது உத்தியோகபூர்வ வாகனக் கொடுப்பனவு (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- எரிபொருள் கொடுப்பனவு - (மாதாந்த) சந்தையில் நிலவும் எரிபொருள் விலைக்கு ஏற்ப 220 லீட்டர் எரிபொருளுக்கான கொடுப்பனவு
- தொலைபேசி கொடுப்பனவு - ரூ. 10,000/- (மாதாந்தம்)

04. **உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு விபரம் பின்வருமா**று

- மாதாந்தக் கொடுப்பனவு - ரூ. 90,000/-
- மாதாந்திர போக்குவரத்து கொடுப்பனவு - வசிக்கும் இடத்திலிருந்து கி.மீ. 350 வரை ரூ. 25,000 கி.மீ. 350ஐ தாண்டும்போது மாதாந்திர கொடுப்பனவு ரூ. 50,000
- தொலைபேசிக் கொடுப்பனவு - ரூ. 8,000/- (மாதாந்தம்)

**நீதிச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,**

**எச்.எஸ். சோமரத்ன,**
**செயலாளர்,**
**நீதிச் சேவை ஆணைக்குழு,**

2024 ஜூலை மாதம் 05ஆம் திகதி

**கொழும்பு 12.**
**நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகத்திலிருந்து**